தினமணி

# மானாவாரி நெற்பயிருக்கு ஏற்ற ஒருங்கிணைந்த உர மேலாண்மை

First Published : 28 Jun 2012 01:19:42 AM IST



ராமநாதபுரம்: தற்போது மானாவாரி நெல் சாகுபடி பரப்பு கணிசமாகக் குறைந்து கொண்டே வருகிறது. பெருகிவரும் மக்கள்தொகையையும் தற்போதைய உற்பத்தி குறியீட்டு அளவையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது எதிர்வரும் ஆண்டுகளில் ஹெக்டேருக்கு சராசரியாக 7 டன் விளைச்சல் என்ற இலக்கை கட்டாயம் அடைய வேண்டும்.

உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், சீரான விளைச்சலைப் பெறவும், வேளாண்மை தொழில்நுட்பங்களை சீரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும். மானாவாரி நெல் விளைச்சலை நிர்ணயிக்கும் தொழில்நுட்பங்களான 1. உயர் விளைச்சல் ரகங்களைத் தேர்ந்தெடுத்தல் (அண்ணா-4 ரகம் உள்பட) 2. சீரிய உழவியல் மற்றும் நீர், களை நிர்வாகம், 3. ஒருங்கிணைந்த உர மேலாண்மை, 4. தேவைக்கேற்ப பயிர்ப் பாதுகாப்பு. இவை நான்கு தொழில்நுட்பங்களில் ஒன்றான ஒருங்கிணைந்த உர நிரவாகம் நெல் உற்பத்தில் ஒரு மிக முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது எனலாம்.

மானாவாரி நெற்பயிருக்கு அடியுரம் இடுதல்: வயலில் ரசாயன உரங்களை மண் ஆய்வு அடிப்படையில் இட வேண்டும். மானாவாரி பகுதி பாசனம் செய்யும் நெல் ரகங்களுக்கு ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து, 10 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்தும் பரிந்துரைக்கப்படுகிறது.

மானாவாரி நெல் ரகங்களுக்கு ஏக்கருக்கு 20 கிலோ தழைச் சத்தும், 10 கிலோ மணிச்சத்தும் 10 கிலோ சாம்பல் சத்தும் பரிந்துரைக்கப்படுகிறது. இதில் அதிரடியாக மணிச்சத்தை ஊட்டமேற்றிய தொழு உரமாக இட வேண்டும். மணிச்சத்து நெற்பயிரின் இளமைப் பருவத்தில் வேர்ப்பிடித்து நன்றாக வளர்வதற்கும் பூக்கள் பூப்பதற்கும் நெல் மணிகள் வளர்ச்சி, எண்ணிக்கை மற்றும் முதிர்வடைதல் ஆகியனவற்றைச் சீராக்கி நெல் விளைச்சலைப் பெருக்கிட ஏக்கருக்கு 62.5 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை 300 கிலோ தொழு உரத்துடன் கலந்து ஒரு மாதம் காற்று புகாமல் வைத்து ஊட்டமேற்றிய தொழுவுரமாக மாற்றி கடைசி உழவில் இட வேண்டும்.

இரும்புச் சத்து குறைபாடுள்ள நிலத்தில் அடியுரமாக இரும்பு சல்பேட்டை ஹெக்டேருக்கு 50 கிலோ என்ற அளவில் இடவும், மானாவாரி நெல்லுக்கு சிங்க் சல்பேட் ஹெக்டேருக்கு 25 கிலோ என்ற அளவில் விதைப்பின் போது இடவும், ஒரு ஹெக்டேருக்கு 10 பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் 10 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா ஆகியனவற்றுடன் 25 கிலோ தொழு உரம் மற்றும் 25 கிலோ மண் கலந்து வயலில் இட வேண்டும்.

மானாவாரி நெற்பயிருக்கு மேலுரம் இடுதல்: நெற்பயிருக்கு மேலுரம் இடுவதில் மிகுந்த கவனம் தேவை. நெல் வளர்ச்சியில் தூர்கட்டும் பருவம், தண்டு உருளும் பருவம் மற்றும் பூக்கும் தருணம் ஆகிய காலங்களில் பயிர் உணவுச் சத்துகளின் தேவை அதிகம். மானாவாரியில் பகுதி பாசனம் செய்யும் நெல் ரகங்களுக்கு இப் பருவங்கள் முறையே நட்ட 20, 40, 60 ஆம் நாளில் உண்டாகின்றன. தழைச்சத்து அடங்கிய யூரியாவை பொது சிபாரிசுப்படி நட்ட 20, 40, 60 ஆம் நாளில் முறையே ஏக்கருக்கு 22 கிலோ யூரியா என்ற அளவில் இட வேண்டும்.

சாம்பல் சத்து உரத்தை நட்ட 20, 40, 60 ஆம் நாளில் முறையே ஏக்கருக்கு 9,8 மற்றும் 8 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷாக இட வேண்டும்.விதைத்த சமயத்திலும், இடையேயும் நல்ல மழை பெய்து பயிரின் வளர்ச்சியும் நன்கு அமைந்திருப்பின், இரண்டாம் தருணமான 40 முதல் 45 நாள்களுக்குள் இடப்படும் யூரியாவை ஏக்கருக்கு 35 கிலோவாக அதிகரிக்கப்படலாம். அதன் பின்னர், குறைந்தது 10 தினங்களுக்காவது தண்ணீர் தேங்கியிருத்தல் கட்டாயம் எனலாம். மானாவாரியில் பகுதி பாசனம் செய்த நெல் ரகங்களுக்கு தழைச்சத்து அடங்கிய யூரியாவை பொது சிபாரிசுப்படி நட்ட 20 மற்றும் 40 ஆம் நாளில் முறையே ஏக்கருக்கு 22 கிலோ யூரியா என்ற அளவில் இட வேண்டும். சாம்பல் சத்து உரத்தை நட்ட 20, 40-வது நாளில் முறையே ஏக்கருக்கு 8 மற்றும் 9 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகவும் இட வேண்டும்.

இலைவழி உரமாக யூரியா 1 சதம், டி.ஏ.பி. 2 சதம் கரைசலை இருமுறை குருத்து உருவான தருணத்திலும், 10 நாள்கள் கழித்து மீண்டும் ஒருமுறையும் தெளித்தல் நல்லது. தற்போது கூறிய வழிமுறைகளை ஒருங்கே கடைப்பிடித்து விலையுயர்ந்த ரசாயன உரத்தை செம்மையாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்தி திட்டமிட்டபடி நெல் விளைச்சலைப் பெருக்கி அனைவருக்கும் உணவு எப்பொழுதும் கிடைக்க நாம் வழி வகுக்க வேண்டும் என்று ராமநாதபுரத்தில் உள்ள

வேளாண்மை அறிவியல் நிலையத்தைச் சேர்ந்த முனைவர்கள் மு. அனுராதா, வி. கணேசராஜா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## பூச்சிகளை கட்டுப்படுத்த "பெவேரியா பேசியானா'

First Published : 28 Jun 2012 01:19:09 AM IST

புதுச்சேரி: ரசாயன பூச்சிக் கொல்லிகளால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் சூழ்நிலையில் பெவேரியா பேசியானா என்ற உயர்ரக பூச்சிக்கொல்லி பல்வேறு பூச்சிகளுக்கு நோய்களை உண்டாக்கி அவற்றை அழிக்கும் வல்லமைப் பெற்றது.

புதுச்சேரி மாநிலம் மற்றும் அருகில் உள்ள மாவட்டங்களில் நெல், கரும்பு, மணிலா, உளுந்து, பச்சைப்பயிறு போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

அதேபோல் கத்தரி, வெண்டை, தக்காளி, மிளகாய், பீன்ஸ், அவரை போன்ற பயிர்களும், மலர்களில் மல்லிகை, கனகாம்பரம், ரோஜா போன்ற பயிர்களும், தோப்புப் பயிர்களான தென்னை, வாழை, மா, கொய்யா, சப்போட்டா, பலா மற்றும் நெல்லி போன்ற பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

வளர்ந்து வரும் விஞ்ஞானத்தோடு கூடிய பல வேளாண் உத்திகள் மற்றும் தொழில் நுட்பங்களை விவசாயிகள் கையாண்டு அதிக மகசூலை ஈட்டி வருகின்றனர்.

ஆனால் இச்சூழ்நிலையில் பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் பெரும் சவாலாக அமைகின்றன.

இதுபோன்ற சூழ்நிலைகளில் விவசாயிகள் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த ரசாயன பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த ரசாயன பூச்சிக்கொல்லிகள் பயிர் சுற்றுச்சூழல் அமைப்பின் முன்னுக்குப்பின் முரணாக அதிக வீரியத் தன்மை கொண்ட பல மூலக்கூறுகளை தாங்கிய ரசாயன பூச்சிக்கொல்லிகளை உபயோகிப்பதால் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளுக்கு எதிர்ப்புத் திறன் உருவாகி விடுகிறது.

மேலும் பருவநிலை மற்றும் தட்பவெப்ப நிலை மாற்றங்களின்போது சாறு உறிஞ்சும் பூச்சிகள் அதிக எண்ணிக்கையில் உருவாகின்றன. இந்த ரசாயன பூச்சிக் கொல்லிகள் சமயங்களில் பயிர்களுக்கு நன்மைத் தரும் பூச்சிகளையும் சேர்த்து அழித்து விடுகின்றன.

எனவே நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் உயர்ரக பூச்சிக்கொல்லிகள் குறைந்த விலையில் கிடைக்கும். இவை விவசாயிகளுக்கு தீமை தரும் பூச்சிகளை மட்டும் நோய் உண்டாக்கி அவைகளை அழிக்கும்.

இவ்வாறு பூச்சிகளை அழிப்பதில் பெவேரியா பேசியானா என்ற பூஞ்சான உயர்ரக பூச்சிக் கொல்லி முக்கியமானதாகும்.

இந்த பெவேரியா பேசியானா என்ற உயர்ரக பூச்சிக்கொல்லியை எந்தெந்த பூச்சிகளை கட்டுப்படுத்த எவ்வளவு பயன்படுத்துவது? என்பது குறித்து பூச்சியியல் துறை வல்லுநர் நி.விஜயகுமாரிடம் கேட்டபோது அவர் கூறியது:

கட்டுப்படுத்தும் பூச்சிகள்: பெவேரியா பேசியானா என்ற உயர்ரக பூச்சிக்கொல்லி நெல், இலை சுருட்டுப்புழு, இலைப் பிணைக்கும் புழு, கொம்புப் புழு, கூண்டுப்புழு, குட்டை கொம்பு வெட்டுக்கிளி, முள் வண்டு, புகையான் மற்றும் பச்சைத் தத்துப்பூச்சி ஆகியவற்றை கட்டுப்படுத்தும்.

தக்காளியில் பழத்துளைப்பானை கட்டுப்படுத்தும். மணிலா, பருத்தி வகைகள், சூரியகாந்தி, பச்சை மிளகாய், கனகாம்பரம், கேந்தி மலரில் தோன்றும் பச்சைப் புழு(ஹலியாதிஸ்) மற்றும் புரடீனியா புழு (ஸ்போடோட்டீரா) ஆகியவற்றையும் கட்டுப்படுத்தும்.

பருத்தியில் உள்ள அனைத்து காய்ப்புழுக்கள் மற்றும் வெள்ளை வண்டு, கரும்பு தண்டுத் துளைப்பான்கள், தென்னை காண்டாமிருக வண்டு மற்றும் சிகப்பு கூண்வண்டு ஆகியவைகளையும் கட்டுப்படுத்தும். கத்தரி, வெண்டை, தக்காளி, மிளகாய், பீன்ஸ், அவரையில் தோன்றும் காய்த்துளைப்பானுக்கும் இதைப் பயன்படுத்தலாம்.

மாமரத்தில் தோன்றும் இலை மற்றும் பூ பிணைக்கும் புழுக்கள், தேக்கு மரத்துளைப்பான், வாழை கிழக்கு கூண் வண்டு மற்றும் தண்டு கூண் வண்டு ஆகியவற்றையும் கட்டுப்படுத்தும்.

பயன்படுத்த வேண்டிய அளவுகள் (ஏக்கருக்கு): நெல்- 1 கிலோ, மணிலா-400 கிராம், பயறு வகைகள்- 400 கிராம், பருத்தி- 600 கிராம், கரும்பு- 2 கிலோ, தென்னை-2 கிலோ, சூரியகாந்தி-400கிராம், காய்கறிப் பயிர்கள்- 1 கிலோ, சாமந்தி- 400 கிராம், கனகாம்பரம்- 400 கிராம், வாழை-2 கிலோ, தேக்கு -2 கிலோ, மா- 4 கிலோ பயன்படுத்த வேண்டும் என்றார்.

## மானாவாரி பருத்தி பயிரிட மண் பரிசோதனை அவசியம்

First Published : 27 Jun 2012 01:51:50 PM IST

பெரம்பலூர், ஜூன் 26: பெரம்பலூர் மாவட்டத்தில், மானாவாரி பருத்தி சாகுபடி செய்வதற்கு மண் பரிசோதனை அவசியம் செய்ய வேண்டும் என்றார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர்.இரா.மாரிமுத்து.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையமானது, பருத்தியில் தேசிய பூச்சி மேலாண்மை தகவல் அமைப்புத் திட்டம், ஒரு கிராமத்தில் ஒரு பருத்தி ரக சாகுபடி திட்டம், முதல்நிலை செயல் விளக்கத்திடல், வயல்வெளி பரிசோதனை திடல் ஆகியவற்றின் மூலம் பருத்தியில் ஏற்படும் பிரச்னைகளான பூச்சிகள் தாக்குதல், நோய் தாக்குதல், தேவையான உர அளவுகள், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, நுண்ணூட்ட சத்துக்கள், அதன் மேலாண்மை

குறித்து பல ஆய்வுகளை செய்து வருகிறது. இந்த ஆய்வுகளின் முடிவுப்படி, மானாவாரி பருத்தி பயிருக்கு மண் பரிசோதனை மிகவும் அவசியமான ஒன்றாகும். பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி பயிரிடும் கரிசல் மண் வகை அதிக அளவிலும், செம்மண் வகை ஒரு சில பகுதிகளிலும் காணப்படுகிறது.

மண் பரிசோதனை செய்யும் போது, மண் ஆய்வக வல்லுநர்கள் வயலில் தழை, மணி, சாம்பல் மற்றும் நுண்ணூட்ட சத்து என்னென்ன அளவுகளில் உள்ளது, எதிர் வரும் பருவத்தில் பயிரிட உள்ள பயிரிக்கு எவ்வளவு உரம் தேவை என்பதை தெளிவாக கண்டறிந்து அறிக்கை தருவார்கள். இந்த அறிக்கையின் பரிந்துரைபடி, பயிருக்கு உரம் இடும்போது பயிர் செழிப்பாகவும், தேவையில்லாத உர செலவு குறைவு, மண்ணின் தரம் கெடுவதையும் தவிர்க்க முடியும். மண் பரிசோதனைபடி உரம் இட்டு பருத்தி பயிர் சாகுபடி செய்யும் போது, ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரையிலான உர செலவைக் குறைத்து, குறைந்த செலவில் அதிக வருமானம் பெற முடியும்.

மேலும் தழைச்சத்தான யூரியாவை பருத்தி பயிருக்கு அதிகளவில் இடும்போது, பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் அதிகளவில் தாக்கி சேதத்தை ஏற்படுத்துவதுடன், அதைக் கட்டுப்படுத்த அதிக பூச்சி மருந்து தெளிப்பினால் பருத்தி சாகுபடிக்கான செலவினம் கூடுவதுடன் மகசூல் குறைந்து, குறைந்த வருமானமே பெற முடியும். எனவே, எதிர் வரும் பருவத்தில் பருத்தி பயிரிடும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து, குறைந்த செலவில் அதிக நிகர லாபம் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு, வேளாண் அறிவியல் மையத்தை நேரில் அல்லது 04328-293251, 293592, 292365 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்றார் அவர்.

## ரூ. 77,475 மதிப்பிலான புல் நறுக்கும் கருவிகள்

First Published : 27 Jun 2012 12:09:27 PM IST

அரியலூர், ஜூன் 26: அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழச்சியில் 7 விவசாயிகளுக்கு ரூ. 77,475 மதிப்பிலான புல் நறுக்கும் இயந்திரங்களை வழங்கினார் மாவட்ட ஆட்சியர் அனு ஜார்ஜ்.

அரியலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நீர்வள, நிலவளத் திட்டப் பயனாளிகளுக்கு இலவசமாக கோ-3 பசுந்தீவன கரணைகள் வழங்கப்படுகின்றன. விவசாயிகள் கோ -3 பசுந்தீவனங்களை நல்ல முறையில் பயன்படுத்துவதற்காக புல் நறுக்கும் கருவிகள் 75 சத மானியத்தில் வழங்கப்படுகிறது.

இதனடிப்படையில், திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழச்சியில் 5 பயனாளிகளுக்கு ரூ. 42,125 மதிப்பிலான கையால் இயக்கும் புல் நறுக்கும் கருவிகள், 2

பயனாளிகளுக்கு ரூ. 35,200 மதிப்பிலான மின்சக்தியால் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் அனு ஜார்ஜ வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்கள் மோகனரங்கன், மாரிமுத்து, கால்நடை உதவி மருத்தவர்கள் இளங்கோவன், குமார், ரெங்கசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

"வனாமி' வரத்து அதிகரிப்பு: தமிழக இறால் விலை வீழ்ச்சி

ஜூன் 27,2012,12:55



மண்டபம்: ஆந்திராவின் "வனாமி' வரத்து அதிகரிப்பால், தமிழகத்தில் இறால் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது. மீன்பிடி தடைக்காலத்திற்கு முன் ஒரு கிலோ(40 இறால்கள்) ரூ.650க்கு கொள்முதல் செய்யப்பட்டது. தடை காலம் முடிந்த பின் கடந்த மாதத்தில் ரூ.550 என்பது தற்போது 400 முதல் 450 ரூபாய் வரை வீழ்ச்சி கண்டுள்ளது. இது குறித்து வியாபாரி வில்சன் கூறியதாவது: இறால்களை கூவி, கூவி விற்கும் சூழல் உள்ளது. ஆந்திராவில் "வனாமி' என

அழைக்கப்டும் வெள்ளை நிற இறால்கள் வரத்து அதிகம் உள்ளது. ஒரு கிலோ வனாமி விலை ரூ 100. இதனால் ஏற்றுமதி கம்பெனிகள், தமிழக இறால்களை கொள்முதல் செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. தூத்துக்குடியில் உள்ள ஏற்றுமதி கம்பெனிகளுக்கு, நாளொன்றுக்கு 30 வேன்களில் "வனாமி' இறால் கொண்டு வரப்படுகின்றன. இதன் வரத்து குறைந்தால்தான் நமது இறால்களின் விலை உயர வாய்ப்புள்ளது,என்றார்.

## தாறுமாறாக உயர போகுது அரிசியின் விலை

ஜூன் 27,2012,09:53



தமிழகத்தில், அரிசி விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், விலை உயர்வை எதிர்பார்த்து விவசாயிகள், நெல் இருப்பு வைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால், அடுத்த ஓரிரு மாதங்களில் கிலோ அரிசி, 45 ரூபாய் என்ற அளவிற்கு, விலை உயர்வு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நடப்பாண்டு, அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லை; தென்மேற்கு பருவ மழையும், எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. நெல் நடவு சீசன் துவங்க வேண்டிய தருணத்தில், மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர்.வழக்கமாக ஜனவரி, பிப்ரவரியில் நெல் அறுவடையின் போது, புதிய அரிசி வரத்து அதிகமாக இருந்தது. விலையும் சற்று குறைந்து, மோட்டா ரக அரிசி (ஐ.ஆர்., 20 போன்ற ரகங்கள்) சில்லரையில், கிலோ, 18 ரூபாய், சன்னக ரக அரிசி (வெள்ளைப் பொன்னி, பொன்னி, கர்நாடகா பொன்னி ரகங்கள்) அதிகபட்சமாக, 35 ரூபாய் வரை விற்றது.

**வழக்கத்திற்கு மாறாக...:** சீசனுக்கு பிறகு செப்டம்பர், அக்டோபரில் தான் அரிசி விலை அதிகரிப்பது வழக்கம். ஆனால், இந்தாண்டு ஜூன் மாதத்திலேயே, விலை அதிகரிக்க துவங்கி விட்டது. தற்போது மோட்டா ரக அரிசி, சில்லரையில் கிலோ, 24 ரூபாய், சன்னக ரக அரிசி அதிகபட்சமாக, 45 ரூபாய் வரை விற்கப்படுகிறது.இதுவும், நிரந்தரமான விலை இல்லை;

தொடர்ந்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. தவிரவும், ரேஷன் அரிசி வினியோகத்தின் முழு அளவுத் தேவைக்கும், மத்திய அரசிடம் தமிழக அரசு அரிசி கேட்டிருக்கிறது. அது விரைவில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**காரணம் என்ன?**

அரிசி வியாபாரிகள் கூறியதாவது:அணைகளில் நீர் இருப்பு இல்லாததும், பருவமழை பெய்ய ஆரம்பிக்காததும், விவசாயிகளிடையே பயத்தை ஏற்படுத்தியுள்ளது.
நெல் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில், நெல் இருப்பு வைக்க துவங்கி விட்டனர்.நெல் அரவை ஆலைகளுக்கு, போதிய நெல் வரத்து இல்லை.
மேலும், விவசாயிகள் நெல் பயிரிடுவதற்கு பதிலாக, கரும்பு உள்ளிட்ட பணப் பயிர்களுக்கு மாறி வருகின்றனர்.
இருக்கிற சூழ்நிலையை பார்த்தால், அடுத்தாண்டு அரிசி தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.
அரிசி கொள்முதல் செய்ய மில்களுக்கு ஆர்டர் கொடுத்தால், ஒரு வாரம், 10 நாள் கழித்து தான் கிடைக்கிறது. அதுவும் புதிய விலைக்குதான் கிடைக்கிறது.
ஒவ்வொரு முறையும் மூட்டைக்கு (75 கிலோ) குறைந்தபட்சம், 200 ரூபாய் வரை அதிகரிக்கிறது.
சில்லரையில் விற்கப்படும் போது, கிலோவுக்கு நான்கு ரூபாய் வரை அதிகரிக்கிறது.
எனவே, அரிசி விலை தொடர்ந்து அதிகரிக்கும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.
தவிரவும் கடந்த 30 நாட்களில் , கிலோவுக்கு இரண்டு ரூபாய் விலையேற்றம் அதிகரித்திருக்கிறது.
கர்நாடகா மற்றும் ஆந்திராவில் இருந்து, சன்னக ரக அரிசி வரத்து குறைந்ததும் விலை உயர்வுக்குக் காரணம்.
அதேசமயம், ரேஷன் அரிசி சப்ளை சீராக இருக்கும்போது, ஏனிந்த விலை உயர்வு என்பது புதிராகும்.

**இட்லி அரிசி விலையும் உயர்வு:** இட்லி (கார்) அரிசி பொதுவாக, சாப்பாட்டு அரிசியை விட விலை குறைவாக இருக்கும்.
தற்போது சாப்பாட்டு அரிசியை விட, விலை அதிகரித்து வருகிறது. இந்தாண்டு துவக்கத்தில் இட்லி அரிசி கிலோ, 18 முதல், 24 ரூபாய் வரை விற்றது. தற்போது படிப்படியாக அதிகரித்து குறைந்தது, 26 முதல், 32 ரூபாய் வரை விற்கிறது.
திருவண்ணாமலை, ஆரணி, கள்ளக்குறிச்சி போன்ற இடங்களில் இருந்துதான், இட்லி அரிசி வருகிறது. தட்டுப்பாடு காரணமாக, இந்த மாதத்தில் மட்டும் கிலோவுக்கு நான்கு ரூபாய் அதிகரித்துள்ளது.

## கோதுமை கொள்முதல்3.73 கோடி டன்னாக உயர்வு

ஜூன் 27,2012,03:35



புதுடில்லி:நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில், இதுவரையிலுமாக, மத்திய அரசின் கோதுமை கொள்முதல், 3.73 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த ஆண்டு சந்தைப்படுத்தும் பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்முதலை விட, 35 சதவீதம் அதிகமாகும்.கடந்த ஆண்டு இதே பருவத்தில், அரசின் கோதுமை கொள்முதல், 2.76 கோடி டன்னாக இருந்தது. நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில் மத்திய அரசு, 3.20 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## விதை உற்பத்தியாளருக்கு தொழில்நுட்ப பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2012,00:50 IST

நாமக்கல்: நாமக்கல் பி.டி.ஓ., அலுவலகத்தில், விதை உற்பத்தியாளர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சிக் கூட்டம் நடந்தது.
வேளாண் துணை இயககுனர் குணசேகரன் தலைமை வகித்தார். அந்தக் கூட்டத்தில், தரமான விதை உற்பத்தியின் நோக்கம் குறித்து விளக்கிப் பேசினார். கூட்டத்தில், விதை வினியோகத்தில் விதைச்சட்ட அமலாக்கம் குறித்து விளக்கிக் கூறப்பட்டது.
அதுபோல், தரமான விதை உற்பத்தி செய்ய, விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய கட்டாய தொழில்நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடி முறை, டி.ஏ.பி., தெளிப்பு, விதையின் முக்கியத்துவம் உள்ளிட்டவை குறித்து விளக்கிக் கூறப்பட்டது. மேலும், விவசாயிகளின் சந்தேகளுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது.

## கறவை மாடுகள் பாதிப்பு

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2012,03:08 IST

குஜிலியம்பாறை : குஜிலியம்பாறை ஒன்றியம் ஆணைபட்டியை சேர்ந்தவர் பாலதண்டாயுதம். இவரது கறவை மாட்டின், "கண்' வெளியே வந்து தொங்கியது. சிகிச்சை தருவதற்குள் மாடு இறந்தது.

* ஆணைபட்டியை சேர்ந்தவர் வேலுச்சாமி. இவரது மாட்டின், வலது கண் பாதிக்கப்பட்டு வெளியே தொங்கியது. எதனால் இப்படி ஆனது என்று தெரியவில்லை.

* ஆணைபட்டியை சேர்ந்த தண்டாயுதத்தின் மாடு, வினோதமான குடல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளது..

இப்பகுதியில், மாடுகள் விநோத நோயால் பாதிக்கப்படுவதை தடுக்க காணை தடுப்பூசி போடவேண்டும்.கால்நடைதுறை யினர் ஆய்வுநடத்த வேண்டும்.

## ஆரஞ்சு சீசன் துவக்கம் கிலோ ரூ. 40-க்கு விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2012,03:08 IST

தாண்டிக்குடி : தாண்டிக்குடி மலைப்பகுதியில் கோடை ஆரஞ்சு சீசன் துவங்கியுள்ளது. கீழ்மலை யில் 40 ஆயிரம் ஏக்கர் பரப்பில் ஆரஞ்சு விவசாயம் செய்யப்படுகிறது. ஜூன் முதல் வாரத்தில் துவங்கும் கோடை கால சீசன் இரு மாதங்கள் நீடிக்கும்.

கடந்த ஆண்டு விளைச்சல் மற்றும் விலை இருந்தது. நடப்பாண்டில் இதில் சரிவு நீடிப்பது விவசாயிகளுக்கு ஏமாற்றமளித்துள்ளது.

பருவ மழை பொய்த்து ஆலங்கட்டி மழை பெய்தது என விளைச்சல் பாதிப்புக்கும், மாம்பழ சீசன் விலை குறைவிற்கும் காரணமாக கூறப்படுகிறது.

பறிக்கப்படும் பழங்கள் கேரளா மாநிலம் மற்றும் மதுரை மார்க்கெட்களுக்கு அனுப்படுகிறது.
கடந்தாண்டு ஒரு கிலோ ரூ.55 முதல் 60 வரை விற்பனையானது.

தற்போது கிலோ ரூ.40 க்கு விற்கிறது.

**நத்தத்தில் மா விலை இல்லை விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2012,03:08 IST

நத்தம் : நத்தத்தில் விலை கிடைக்காததால் மாங்காய்களை பறிக்காமல் மரத்திலேயே விட்டுள்ளனர்.

நத்தம் மற்றும் சாணார்பட்டி ஒன்றியங்களில் 10 ஆயிரம் ஏக்கரில் மா சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் மே முதல் ஜூலை வரை மா சீசனாகும்.

இந்தாண்டில் மா மரங்களில் ஆரம்பத்தில் 40 சதவீதம் மட்டுமே பூக்கள் காணப்பட்டன.

குத்தகைதாரர்கள், விவசாயிகள் சிலர் மரங்களில் அதிக சாகுபடிக்காக மருந்து தெளித்தனர். மழையின்றி காய்கள் பெருகவில்லை.

இதன் பிறகு 4 முறை பெய்த கோ டை மழை காரணமாக மரங்களில் தளிர் ஏற்பட்டு இரண்டாம் கட்ட பூக்கள் காணப்பட்டன.

கல்லாமை, காசா, செந்தூரா, சப்பட்டை, பங்கனபள்ளி, இமாம்பசந்த்,காதர் ஆகிய மாங்காய் ரகங்கள் ஆரம்ப நாட்களில் விலை போனது.

இரண்டாம் கட்டமாக சாகுபடியான கல்லாமை, காசா மாங்காய்கள் அதிக மகசூல் ஏற்பட்டது.இதனால் இவை அதிக வரத்துள்ளன.

ஒரு டன் கல்லாமை விலை ரூ.3 ஆயிரம், காசா விலைரூ.4 ஆயிரம் வரை குறைந்து விற்கப்படுகிறது.

இதனால் சில தோப்புகளில் காய்களை பறிக்காமல் மரத்திலேயே விட்டுள்ளனர். இவை தானாகவே பழுத்து கீழே விழுந்து வீணாகின்றன.

---

தினகரன்

விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பதிவு செய்த நேரம்:2012-06-27 11:42:41

திண்டுக்கல்: திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில், ஜூன் 29ம் தேதி காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க் கும் நாள் கூட்டம் நடை பெற உள் ளது. கடந்த கூட்டத்தில் விவசாயிகள் கொடுத்த மனுக்களின் மீது அதிகாரிகள் விசாரித்து தீர்வு காண்பர்.

அனைத்து துறை தலைமை அலுவலர்களும் பங் கேற்க உள் ளனர். விவசாயிகள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேங்காய் கொள்முதல் நிலையம் பரவாக்கோட்டையில் வேண்டும்

பதிவு செய்த நேரம்:2012-06-27 10:24:53

மன்னார்குடி: பரவாக்கோட்டை மற்றும் முத்துபேட்டையில் தேங்காய் கொள்முதல் நிலையம் திறக்க வலியுறுத்தி, தென்னை விவசாயிகள் சங்கத்தினர் மன்னார்குடியில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இதில் திருவாரூர் மாவட்ட தென்னை விவசாயிகள் சங்க செயலாளர் சுப்பிரமணியன், சந்திரசேகரன், லெனின், தங்கவேலு, தர்மதுரை, பிரகாசம், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். தேங்காய் விலை கிலோ ரூ.16, கொப்பரை தேங்காய் விலை ரூ.70 என நிர்ணயிக்கவேண்டும். தேங்காய் விலையை பன்னாட்டு நிறுவனங்கள் நிர்ணயிக்கும் நிலையை மாற்றி அரசே கொள்முதல் நிலையங்களை திறக்கவேண்டும். திருவாரூர் மாவட்டத்தில் பரவாக்கோட்டை, முத்துப்பேட்டையில் தேங்காய் கொள்முதல் நிலையத்தை திறக்கவேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர். முன்னதாக நகராட்சி அலுவலகத்தில் இருந்து பேரணி நடைபெற்றது.

## மேட்டூர் நீர்மட்டம் 78.30 அடி

பதிவு செய்த நேரம்:2012-06-27 10:50:29

மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 78.30 அடியாக உள்ளது.
காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாத காரணத்தால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் விநாடிக்கு 326 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று மாலை விநாடிக்கு 291 கனஅடியாக குறைந்தது.
இந்நிலையில், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு விநாடிக்கு 1200 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 78.30 அடியாக இருந்தது. நீர் இருப்பு 40.28 டி.எம்.சி.